திரு. நா. வீராசாமி: இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமையைப் பற்றிப் பேசுகின்ற மத்திய சர்க்கார் டெல்லிக்குப் 10 கோடியைக் கொடுத்து, கல்கத்தாவுக்கு 1 கோடியைக் கொடுத்துவிட்டு, தமிழ்நாட்டு அரசாங்கம் எழுதிய கடிதத்திற்குக் கூட பதில் எழுதவில்லையே, அமைச்சர் அவர்கள் 5 கோடி கொடுத்தால் போதும் என்கிறார்கள். இந்த உணர்வுகளை மத்திய அரசுக்கு வற்புறுத்தி, நமக்குச் சேரவேண்டிய பங்கினைப் பெற நமது சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கோடிகள் எல்லாம் நமக்குக் கிடைக்காததற்குக் காரணம் நாம் ஒரு கோடியில் இருப்பது தான்.

Transport Development Council

*703 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a Transport Development Council for the State; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) 31-1-1974-ல் இருந்து 2 ஆண்டுக் காலத்திற்குச் செயல்படத் தமிழகப் போக்குவரத்து வளர்ச்சி மன்றம் ஒன்றை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இம்மன்றத்தில் அலுவல் சார்புள்ள, சார்பற்ற உறுப்பினர்கள் 19 பேர் இருப்பார்கள். சாலைப் போக்குவரத்துக் கொள்கை பற்றிய முக்கியமான விஷயங்களில் அரசுக்கு ஆலோசனை சொல்வது இம்மன்றத்தின் வேலையாகும். 6 மாதங்களுக்கு ஒரு முறை இம்மன்றம் கூடும்.

இம்மன்றத்தின் கீழ், நிலைக் குழுக்கள் நான்கு இருக்கும். இக்குழுக்கள், அவற்றின் பரிந்துரைகளை மன்றம் தக்கவாறு ஆராய்வதற்கு வசதியாக, மன்றம் கூடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் சென்னையில் கூடும்.

திருமதி த். ந. அனந்தநாயகி: இப்படி எல்லாவற்றுக்கும் ஆய்வுக் குழு போடுகிறார்கள். ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை இலாக்காக்கள் அமல்படுத்துவது கிடையாது. ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை அமல் படுத்தாதபோது இவைகளைப் போடுவதன் மூலம் நேரம்தான் வீணாகும் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை).

1974 மார்ச் 30]

திரு. கு. காமாட்சி : இந்த ஆய்வுக் குழுவில் நம் மன்றத்திலேயே நல்ல அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் திரு. அழகமுத்து, திரு. ஆறுமுகம், திரு. கேசவனு போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இடம் பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கெனவே நான்கு குழுக்கள் இருந்தன. State Transport Advisory Committee, Tamil Nadu State Road Development and Traffic Planning Committee, Greater Madras Road Development and Traffic Committee and Madras City Road Development and Traffic Planning Committee. அந்த நான்கையும் ஒன்றாக்கி Tamil Nadu Transport Development Council என்ற அமைப்பாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் நான்கு எம். எல்.ஏக்கள், ஒரு எம். எல். சி., ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.[

(முற்பகல் 10·00)

2. கவன ஈர்ப்பு.

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, இனாம் கொடறங்குளம் கிராமத்தில் கட்டிடங்கள், பலன் தரும் மரங்கள், குளம் பாசி முதலியவை ஏலம் விடப்படாதது குறித்து.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தாலுக்கா, இனாம் கொடறங்குளம் கிராமம், சென்னை இனாம் ஒழிப்புச் சட்டம் 26/63-ன் கீழ் எடுக்கப்பட்டு அரசுடைமையான பிறகும், கட்டிடங்கள், பலன் தரும் மரங்கள், குளம் பாசி வகையறுக்கள் ஏலம் விடாதது குறித்தும் விவசாயிகளிடமிருந்து அரசு மேல்வாரமோ, தீர்வையோ இதுவரை வசூலிக்காதது குறித்தும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டத்தின் கீழ் (சட்டம் 26/1963) இனாம் கொடறங்குளம் கிராமம் அரசு எடுத்துக் கொள்ளவிருக்கும் கிராமமாக 1—10—1966 ஆம் நாள்